# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.11.2015 முதல் 11.11.2015)

***அறிக்கை எண் 87-2015*** ***தேதி: 06.10.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 17°செ முதல் 19°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

***எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (07.11.2015 முதல் 11.11.2015)***

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை் 22°செ 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 முதல் 92 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 86 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07.11.15 | 22 | 32 | 22 | 7 | 92 | 86 | 4 | தென்மேற்கு |
| 08.11.15 | 22 | 32 | 22 | 7 | 92 | 86 | 4 | தென்மேற்கு |
| 09.11.15 | 22 | 32 | 22 | 7 | 92 | 86 | 4 | தென்மேற்கு |
| 10.11.15 | 12 | 33 | 23 | 6 | 90 | 84 | 4 | தென்மேற்கு |
| 11.11.15 | 4 | 33 | 23 | 6 | 90 | 82 | 4 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கடந்த வாரங்களில் கன மழை பெறப்பட்டது. வரும் நாட்களிலும் கன மழை பெற வாய்ப்புள்ளது. முன்பட்ட பருவத்தில் நடப்பட்ட கரும்பு அறுவடை பருவத்திற்க்கு வந்துள்ளது. எனவே, வடிகால் வசதி செய்யவும். இதன் மூலம் கரும்பின் தரம் குறையாமல் இருக்கும்.
- ✓ காற்றின் வேகம் 5 கி.மீ-க்கும் குறைவாக இருப்பினும், அதிக மழை பெற வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். மேலும் வாடல் நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த 60 மில்லி கிராம் கார்பன்டஸிம் அல்லது 50 கிராம் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் ஜீலாட்டீன் மாத்திரை குடுவையில் இட்டு, கிழங்கின் அருகே இடப்பட்ட துவாரத்தின் வழியாக ஊசி போடவும். அல்லது ஒரு குழிக்கு ஐந்து கிலோ சக்கரை பிழிந்த கழிவை இடுவதன் மூலம், நோயின் தாக்கத்தை குறைக்க முடியும்.
- ✓ காய் வெடிக்கும் பருவத்திலுள்ள இறவை கம்போடியா பருத்தி மற்றும் கிழங்கு பிடிக்கும் பருவத்திலுள்ள இறவை மஞ்சளுக்கும் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வானம் மேகமூட்டத்துடனும் தொடர்ந்து மழை பெறவும் வாய்ப்புள்ளதால், இறவை மஞ்சளில் நுண்ணூட்ட குறைபாடு தென்பட வாய்ப்புள்ளது. இதற்கு 15 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை 25 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு ஊற வைத்து, வடிகட்டிய கரைசலை 250 லிட்டராக தயார் செய்யவும். இதில் இரும்பு சல்பேட், துத்தநாக சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியா தனித்தனியே 375 கிராம் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் மழை பெற வாய்ப்புள்ளதால், கறவை மாடுகளின் மடியை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலில் கழுவி பின் பால் கறக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ காய் வெடிக்கும் பருவத்திலுள்ள இறவை கம்போடியா பருத்தி மற்றும் கிழங்கு பிடிக்கும் பருவத்திலுள்ள இறவை மஞ்சளுக்கும் வடிகால் வசதி செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.